கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி

முன்னிலை:– திரு.எஸ். மனோஜ்குமார், எம்.ஏ., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.

2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 06 ஆம் நாள் திங்கள்க்கிழமை

**இடைநிலை மனு எண்.3/2023**
அதன்
**அசல் வழக்கு எண்.441/2022**

CNR No.TNTS 01 001383-2022 )

| | | |
|---|---|---|
| சுப்பிரமணியன் | . . . | மனுதாரர்/புதிதாக கட்சி சேர்க்கப்பட வேண்டியவர் |
| | ..எதிர்.. | |
| 1. மாரியப்பன் | . . . | 1 வது எதிர்மனுதாரர்/வாதி பிரதிவாதி |
| 2. பட்டம்மாள் | . . . | 2 வது எதிர்மனுதாரர்/பிரதிவாதி |

இந்த இடைநிலை மனுவானது கடந்த 23.09.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.சிவசக்திவேலு அவர்களும், 1 வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.இராதாகிருஷ்ணன் அவர்களும் முன்னிலையாகியுள்ள நிலையில் 2 வது எதிர்மனுதாரருக்கு நாளிதழ் மூலம் விளம்பரப்படுத்தியும், 2 வது எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பாராக தீர்மாணிக்கப்பட்டுள்ள நிலையிலும், மேற்படி முன்னிலையாகியுள்ள வழக்கறிஞர்கள் நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10 மற்றும் பிரிவு 151–ன் கீழ், அசல் வழக்கில் இந்த மனுதாரரை கட்சியாக சேர்த்துக்கொள்ள உத்தரவிடக் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>**மனுவின் சுருக்கம்**</u>:–

அசல் வழக்கானது 1வது எதிர்மனுதாரர்/வாதியால், 2வது எதிர்மனுதாரர்/பிரதிவாதியிடமிருந்து அசல் மற்றும் வட்டி தொகையை திரும்ப பெற வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 2வது எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாக காட்டப்பட்டுள்ள 1 மற்றும் 2 தபசில் சொத்துக்களில் 2வது எதிர்மனுதாரருக்கு எவ்வித பாத்தியமோ அனுபவமோ கிடையாது. மேற்படி சொத்துக்களைப் பொறுத்து தீர்ப்புக்கு முன் ஜப்தி கோரி 1வது எதிர்மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் தபசில் சொத்தைப் பொறுத்து இந்த மனுதாரரால், 2வது எதிர்மனுதாரருக்கு எதிராக தென்காசி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கானது அசல் வழக்கு எண்.617/2022 ஆக நிலுவையில் இருந்து வருகிற நிலையில், 2வது எதிர்மனுதாரர், மனுதாரரிடம் பெற்ற கடன் தொகை ரூ.6,68,592/–ற்கு பிரதிபிரயோஜனமாக 1வது தபசில் சொத்தைப் பொறுத்து 22.12.2022 ஆம் தேதியன்று ஒரு பதிவு கிரைய ஆவணத்தை பிறப்பித்துக் கொடுத்துள்ளார். எனவே 1வது தபசில் சொத்தைப் பொறுத்து 1வது எதிர்மனுதாரர்/வாதி எந்த ஒரு பரிகாரமும் கோர இயலாது. எனவே அசல் வழக்கிற்கு இந்த மனுதாரரும் அவசியக் கட்சி என்பதால் மனுதாரரை அசல் வழக்கில் கட்சி சேர்க்க உத்தரவிடக்கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>**1வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்**</u>:–

மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக் கூடியதல்ல. 1வது எதிர்மனுதாரரிடம், 2வது எதிர்மனுதாரர் கடந்த 18.08.2020 ஆம் தேதியில் ரூ.7,00,000/– கடனாகப் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக புரோநோட்டு பிறப்பித்துக் கொடுத்து தபசில் சொத்துக்களை பிணையமாக காட்டியுள்ளார். இதுபோன்று பல நபர்களிடம் 2வது எதிர்மனுதாரர், தபசில் சொத்துக்களைக் காட்டி கடன் பெற்றுள்ளார். ஆனால், 2வது எதிர்மனுதாரர், மனுதாரருடன் வஞ்சகக் கூட்டு சேர்ந்துகொண்டு, அசல் வழக்கு நிலுவையில் இருப்பது தெரிந்தும், வழக்கிற்குப் பின்னர் தபசில் சொத்தை 20.12.2022 ஆம் தேதியன்று இந்த மனுதாரருக்கு கிரையம் கொடுத்துள்ளார். வழக்கு நிலுவையில் இருக்கும்போது ஏற்பட்ட கிரையமானது சட்டப்படி செல்லக் கூடியதல்ல. எனவே

இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால்

"மனு அனுமதிக்கக் கூடியதா?"

என்பதே ஆகும்.

5. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>பிரச்சனைக்கான தீர்வு</u>**:–

இந்த மனுவின் மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அசல் வழக்கானது 1வது எதிர்மனுதாரர்/வாதியால், 2வது எதிர்மனுதாரர்/பிரதிவாதியிடமிருந்து அசல் மற்றும் வட்டி தொகையை திரும்ப பெற வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அசல் வழக்கில் 2வது எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாக காட்டப்பட்டுள்ள 1 மற்றும் 2 தபசில் சொத்துக்களில் 2வது எதிர்மனுதாரருக்கு எவ்வித பாத்தியமோ அனுபவமோ கிடையாது என்றும், மேற்படி சொத்துக்களைப் பொறுத்து தீர்ப்புக்கு முன் ஜப்தி கோரி 1வது எதிர்மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் தபசில் சொத்தைப் பொறுத்து இந்த மனுதாரரால், 2வது எதிர்மனுதாரருக்கு எதிராக தென்காசி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கானது அசல் வழக்கு எண்.617/2022 ஆக நிலுவையில் இருந்து வருகிற நிலையில், 2வது எதிர்மனுதாரர், மனுதாரரிடம் பெற்ற கடன் தொகை ரூ.6,68,592/–ற்கு பிரதிபிரயோஜனமாக 1வது தபசில் சொத்தைப் பொறுத்து 22.12.2022 ஆம் தேதியன்று ஒரு பதிவு கிரைய ஆவணத்தை பிறப்பித்துக் கொடுத்துள்ளதாகவும், எனவே 1வது தபசில் சொத்தைப் பொறுத்து 1வது எதிர்மனுதாரர்/வாதி எந்த ஒரு பரிகாரமும் கோர இயலாது என்றும், எனவே அசல் வழக்கிற்கு இந்த மனுதாரரும் அவசியக் கட்சி என்பதால் மனுதாரரை அசல் வழக்கில் கட்சி சேர்க்க உத்தரவிட வேண்டியது அவசியம் என்றும் வாதிட்டிருக்கிறார்.

7. 1வது எதிர்மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர், 1வது எதிர்மனுதாரரிடம், 2வது எதிர்மனுதாரர் கடந்த 18.08.2020 ஆம் தேதியில் ரூ.7,00,000/– கடனாகப் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக புரோநோட்டு பிறப்பித்துக் கொடுத்து தபசில்

சொத்துக்களை பிணையமாக காட்டியுள்ளதாகவும், இதுபோன்று பல நபர்களிடம் 2 வது எதிர்மனுதாரர், தபசில் சொத்துக்களைக் காட்டி கடன் பெற்றுள்ளார் என்றும், ஆனால், 2 வது எதிர்மனுதாரர், மனுதாரருடன் வஞ்சகக் கூட்டு சேர்ந்துகொண்டு, அசல் வழக்கு நிலுவையில் இருப்பது தெரிந்தும், வழக்கிற்குப் பின்னர் தபசில் சொத்தை 20.12.2022 ஆம் தேதியன்று இந்த மனுதாரருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது ஏற்பட்ட கிரையமானது சட்டப்படி செல்லக் கூடியதல்ல என்றும், எனவே இந்த மனுதாரர் வழக்கிற்கு அவசியக் கட்சி அல்ல என்றும் வாதிட்டிருக்கிறார்.

8. இரு தரப்பு வாதங்களும், வழக்காவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பு பிரதான வாதமானது, அசல் வழக்கானது 1 வது எதிர்மனுதாரரால், 2 வது எதிர்மனுதாரரிடமிருந்து, 1 வது எதிர்மனுதாரருக்கு வரவேண்டிய தொகையை வட்டியுடன் வசூலிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டு, அதில், தபசில் சொத்துக்களைப் பொறுத்து தீர்ப்பிற்கு முன் ஜப்தி கோரி மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், தபசில் சொத்துக்களில் 1 வது தபசில் சொத்தைப் பொறுத்து, 2 வது எதிர்மனுதாரரான பிரதிவாதி, இந்த மனுதாரருக்கு 20.12.2022 ஆம் தேதியன்று ஒரு கிரைய ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ளதால், 1 வது தபசில் சொத்தைப் பொறுத்து 2 வது எதிர்மனுதாரருக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றும், எனவே தானும் இந்த வழக்கிற்கு அவசியக்கட்சி என்பதால் தன்னை அசல் வழக்கில் ஒரு கட்சியாக சேர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்பதாகும். 1 வது எதிர்மனுதாரர் தரப்பில் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னிட்டு 2 வது எதிர்மனுதாரர், மனுதாரருக்கு கிரையம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதால் அந்த கிரையமானது சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்பதால், மனுதாரரை கட்சி சேர்க்கக் கோரியுள்ள இந்த மனுவானது நிலைக்கத்தக்கதல்ல என்று வாதிடப்பட்டுள்ளது. இரு தரப்பு வாதங்களைப் பரிசீலனை செய்ததில், 1 வது தபசில் சொத்தைப் பொறுத்து 2 வது எதிர்மனுதாரரான பிரதிவாதி, இந்த மனுதாரருக்கு 20.12.2022 ஆம் தேதியன்று கிரையப் பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்துள்ள சங்கதி குறித்து இரு தரப்பிலும் எந்தவித மறுப்பும் இல்லை. அசல் வழக்கானது 1 வது எதிர்மனுதாரரால், 2 வது எதிர்மனுதாரரிடமிருந்து புரோநோட்டின்பேரில் வரவேண்டிய தொகையை வசூலிப்பதற்காக தாக்கல்

செய்யப்பட்டிருந்தாலும், தபசில் சொத்துக்களைப் பொறுத்து தீர்ப்புக்கு முன் ஜப்தி கோரி மனுவும் 1 வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், 1 வது தபசில் சொத்தைப் பொறுத்து இந்த மனுதாரர் பெயருக்கு கிரையம் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில், அசல் வழக்கின் தீர்முடிவிற்கு மனுதாரரும் ஒரு அவசியத் தரப்பாராக உள்ளார் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்தச் சூழ்நிலையில் நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. மனுதாரரை அசல் வழக்கில் உத்தேச 2 ஆம் பிரதிவாதியாக கட்சி சேர்த்துக்கொள்ள அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தப்பட்டு, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 06 ஆம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2025.10.06 17:39:57 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

**<u>மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u>**

இல்லை

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2025.10.06 17:40:03 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

-----------------------------------
கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி
இடைநிலை மனு எண்.3/2023
அதன்
அசல் வழக்கு எண்.441/2022
உத்தரவு (நேரிய)
நாள்: 06.10.2025
-----------------------------------